அறிவித்தல்

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல்**

இலக்கம் 2231 மற்றும் 2021.06.04ம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கமைய, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு 2020/2021 மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் வாய் மொழி மூல பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இத்துடன் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 405 உத்தியோகத்தர்களையும் 2025.09.01 ம் திகதி முதல் செயற்படும் வகையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழு தீர்மானித்துள்ளதாக அக் குழுவின் செயலாளரின் இலக்கம்: ESC/APP/SLEAS/01/25/2021(II) மற்றும் 2025.08.14 ம் திகதியுடைய கடிதம் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது.

02. அதற்கமைய, நியமனம் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெற்ற உத்தியோகத்தர்கள் 2025.09.01ம் திகதி திங்கட் கிழமை மு.ப. 8.00 மணிக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்வதற்காக இசுருபாய, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்கு, அதற்கான அழைப்புக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தி உறுதிப்படுத்தக்கூடிய ஆவணமொன்றுடன் சமூகமளிக்க வேண்டும்.

03. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம்: PSC/EST/05-03/03/2019 மற்றும் 2020.01.01 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய தங்களது நியமனத்திற்குரிய தகைமைகளைப் பரிசோதிக்கும் திகதியான 2021.07.30ம் திகதி முதல் இது வரையில் ஒழுக்காற்று ரீதியொல் தண்டனைகள் பெற்றுள்ளீர்களா/ குற்றப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணமொன்றை இணைப்பு 01 இற்கமைய வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பூரணப்படுத்தி நியமனக் கடிதம் வழங்கப்படும் தினத்தன்று சமர்ப்பிப்பது கட்டாயமாகும். குறித்த மாதிரிப் படிவத்தை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு அன்றைய தினம் நியமனம் வழங்கப்படமாட்டாது என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின்12.2.(ii) பந்தியின் பிரகாரம் புதிய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் சேவை ஆரம்ப பயிற்சியானது 2025.09.02 ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதால், அதில் கலந்துகொள்வதற்கு உத்தியோகத்தர்கள் தயாராகி சமூகமளித்தல் வேண்டும்.

05. அத்துடன், 2025 செப்டெம்பர் மாதம் முதல் தங்களது மாதாந்த சம்பளம் வைப்பிலிடப்படவேண்டிய கணக்கிற்குரிய தகவல்களை இணைப்பு 03 மாதிரிப் படிவத்திற்கமைய பூரணப்படுத்தி அன்றைய தினம் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

நாலக களுவெவ
செயலாளர்